மதி4/0/2023

# மதுரை மாநகராட்சி

## கட்டிட கழிவுகள் மேலாண்மை விதிகள் – 2016

## (மதுரை மாமன்ற தீர்மானம் எண் : , நாள்: )

29.03.2016–ல் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள கட்டிட கழிவுகள் மேலாண்மை விதிகள் – 2016 மாமன்றத்தின் பார்வைக்கு, இந்த விதிகளின் அடிப்படையில் மாநில அரசால் 12 மாதகாலத்திற்குள் பொதுவான கொள்கை முடிவுகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி சட்டம் 1971, பிரிவு 128, 230–ல் மாநகரை சுத்தமாக மற்றும் பாதுகாப்பான வகையில் மேலாண்மை செய்வதற்கு துணைவிதிகளில் ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மத்திய அரசின் கட்டிட கழிவுகள் மேலாண்மை விதிகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நடைமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

1. நமது மாநகரை பொறுத்தவரையில் கட்டிட கட்டுமானப் பணிகள் ஆண்டுக்கு சுமார் 4200 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. இம்மாநகராட்சி 147.99 சதுரகிலோமீட்டர் பரப்பளவு உடையது. மாநகரின் மையப்பகுதியில் பழமையான கட்டிடங்கள் உள்ளதால் அத்தகைய கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு வாய்ப்புள்ளதால் கட்டிட கழிவுகள் உற்பத்தியாகும். மேலும் மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகள் வளர்ந்து வரும் நிலையில் கட்டிட கழிவுகள் உற்பத்தியாகும்.
2. மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் கட்டிடக் கழிவுகளை கொண்டு சேர்க்கலாம். கோச்சடை 500 ஏக்கர், மாட்டுத்தாவணி வடக்கு மண்டலம் 2.5ஏக்கர், கேட்லாக் ரோடு தெற்கு மண்டலம், வெள்ளைக்கல், மேற்கு மண்டலம்.

Scanned with Oken Scanner

**கட்டிடம் இடிக்க (ம) கட்டிட கழிவுகளை கையாளுதல் விதிகள்:-**

1. கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோர் ஒவ்வொரு வரும் கட்டிட கழிவுகளை சேகரித்தல், கான்கிரீட், மணல் மற்றும் இதர பொருட்களாக பிரித்தல், சேமித்தல் மற்றும் அகற்றுவதற்கு முழு பொறுப்பாவார்கள்.
2. கட்டிட கழிவுகளை மற்ற கழிவுகளுடன் கலக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோரின் கடமையாகும்.
3. கட்டிட கழிவுகளை உற்பத்தி செய்வோர்கள் நாள் ஒன்றுக்கு 20 டன்னுக்கு மேலாக அல்லது கட்டிடத்தின் கழிவு மாதம் ஒன்றுக்கு 300 டன்னுக்கு மேலாக இருந்தாலோ கழிவுகளை கான்கிரீட், மணல், கம்பி, செங்கல் மற்றும் கலவை, மரம் மற்றும் பிளாஸ்டிக் என நான்கு வகைகளாக பிரிக்க வேண்டும். மேலும் கழிவுகளை மேலாண்மை செய்யும் திட்டத்தை தயாரித்து கட்டிடம் இடிக்கும் பணி துவங்கும் முன்பாக மாநகராட்சிக்கு சமர்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும்.
4. கட்டிட கழிவுகளை கட்டிட கழிவு உற்பத்தியாளர்கள் தங்களது வளாகத்திற்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

கட்டிட கழிவுகளை உற்பத்தியாளர்கள் அதாவது கட்டிடத்தை இடிப்பவர்களும், கீழ்க்கண்ட உரிமையாணை கட்டணங்களை செலுத்தி மாநகராட்சியின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

| வ.எண். | கட்டணங்கள் விபரம் | தொகை | |
|---|---|---|---|
| 1. | கட்டிடம் இடிப்பதற்கான உரிமக் கட்டணம் | 150/- 1சதுரமீட்டருக்கு | |
| 2. | கட்டிட கழிவுகளை மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் சேமித்து வைத்து தமது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள கட்டணம் | 150/- 1கனமீட்டருக்கு | |
| 2.(அ) | மனுதாரரே மாநகராட்சி இடத்தில் கொண்டு வந்து வழங்க | கட்டணம் ஏதுமில்லை | |
| 3. | சிறிய அளவிலான கட்டிடக் கழிவுகள் மாநகராட்சிகள் வாயிலாக அகற்றிட | கட்டணம் ஏதுமில்லை | |

ஆணையாளர்
மதுரை மாநகராட்சி

Scanned with Oken Scanner